மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் வரத்து இருக்குமாயின், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த இடங்களில் உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையம், திறக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

260—

குளிர்சாதனப் பேருந்து

***34372—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்திலிருந்து திருப்பதிக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்திலிருந்து திருப்பதிக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, ஆய்வு செய்து, பயணிகளுடைய எண்ணிக்கை அதிகம் இருக்கும்பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

2014 ஜூலை 25]

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமே எனது குடும்பம், தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், தமிழக மக்களின் நலனே எனது நலன் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உயரிய எண்ணத்தோடு, இலட்சிய நோக்கோடு, முற்போக்கு சிந்தனையோடு, முடிவில்லா வெற்றிகளோடு, தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் முன்னேற்றமான பல நன்மைகளை அள்ளித்தரும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

காஞ்சிபுரத்திலிருந்து தினந்தோறும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் திருப்பதிக்குச் சென்று வருகின்றார்கள். அவர்களுடைய வசதிக்கேற்ப குளிர்சாதனப் பேருந்தை இயக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று மிக விரைவில் அங்கு இயக்கப்படும் என்ற மாண்புமிகு அமைச்சரின் பதிலுக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 261, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

261—

மழைநீர் வடிகால்

***7955—திரு. தா. மலரவன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சி, அவினாசி சாலை மேம்பாலத்தின்கீழ் மழைக் காலத்தில் தேங்கும் தண்ணீரை வெளியேற்ற அரசு ஆவன செய்யுமா?